# ★ பேச்சுக்கான சூழலை உருவாக்க முயல்வேன்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 24 இதழ் 355
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 6-2-1994

## ஆயர் கென்னத் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

இரு தரப்பாரையும் பேசத் தக்க நல்ல சூழலை ஏற்படுத்த தனது யாழ் விஜயத்தைப் பயன்படுத்தப்போவதாக ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று மாலை வருகைதந்த ஆயர் கென்னத் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அரசபடைகளால் மேற்கொள்ளப்பட்ட அழிவுகளையும் இதைவுகளையும் நேரில் கண்டதாகவும் அதனை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவுள்ளதாகவும் யாழ்ப்பா (4-ம் பக்கம் பார்க்க)

## மெதடிஸ்த சபை — புலிகள் சந்தித்து பேச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள மெதடிஸ்த திருச்சபைப் பிரதிநிதிகள் நேற்று மாலை விடுதலைப் புலிகள் இயக்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுமாலை 6 30 மணிக்கு இப்பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. இப்பேச்சுக்களில் மெதடிஸ்த திருச்சபை சார்பில் வண: டுவிப் பெர்ணாண்டோ, நோர்மன் தக்வர், எபநேசர் ஜோசப், அனில் சில்வா, பிரேமலால் பெரேரா, ஞேகித ஞ. சில்வா, சுமித்திரா பெர்ணாண்டோ, திருமதி ஆன் அபயசேகரா, திருமதி பேவிலா ஞேசா, (4-ம் பக்கம் பார்க்க

## தஞ்சம் நிராகரிக்கப்பட்ட

# 100 இலங்கைத்தமிழ் அகதிகள்

# டென்மார்க்கில் உண்ணாவிரதம்

## 36 தமிழர்கள் கடலில் மீட்பு

(ஹோபன்ஹேகன்)

டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கோரி அது நிராகரிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட இலங்கை தமிழ் அகதிகள் அங்குள்ள அகதிகள் கேந்திரங்களில் கடந்த சில நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை டென்மார்க் கடலில் 3 சிறிய படகுகளில் தத்தளித்த 36 இலங்கை தமிழர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது!

இலங்கையிலிருந்து டென்மார்க் சென்று அங்கு சுமார் 400 தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். இதில் நூற்றுக்கும் மேற்பட்டோரின் அரசியல் தஞ்ச விண்ணப்பங்கள் குடிவரவு அதிகாரிகளால் நிராகரிக்கப்பட்டதையடுத்து அவர்கள் மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படவுள்ளனர். இதையடுத்து இவர்கள் கூட்டாகத் தங்களைத் திருப்பி அனுப்பக் கோரி உண்ணா (2-ம் பக்கம் பார்க்க)

## சர்வோதய தலைவர் யாழ். வந்தார்

(யாழ்ப்பாணம்)

சர்வோதய தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்னவும் அவரது மனைவியும் நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

பலாலிக்கு விமான மூலம் வந்த இவர்கள் கடல் வழியாக பருத்தித்துறைக்கு வந்தனர். இவர்களுடன் யாழ் அரச அதிபர் திருமதி மாணிக்கவாசகரும் வந்து சேர்ந்துள்ளார். (2-ம் பக்கம் பார்க்க)

## பேச்சு நடத்துவது புலிகளை சார்ந்தது!

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். அவர் தரப்பில் இது ஒரு நல்ல சைகை. இவ்வாய்ப்பைப் (2ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் சூடு

## கான்ஸ்டபிள் பலி ஐவர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டதுடன் ஐந்து பொலிசார் காயம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர் என்று ஒரு பொலிஸ் அதிகாரி கூறியுள் (2-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி மக்கள் ஏமாற்றப்பட்டு வருகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி மக்கள் பல முறை பல வழிகளில் தென்பகுதி அரசியல் வாதிகளால் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். இதனால் ஏற்பட்ட விளைவுகளே இன்றைய இந்த நெருக்கடிகளுக்குக் காரணமாகும். தனிமனித சுதந்திரத்தை, அபிலாசைகளை பறித்தெடுத்து அனுபவிக்க முனைபவர்கள் தென்இலங்கை அரசியல் வாதிகள் இதனால் ஏற்பட்டது தான் (4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் புலிகளை ஒழித்துக்கட்ட ஜனாதிபதியால் முடியவில்லை

(லண்டன்)

தென் இலங்கையில் ஜே. வி. பியையும், வடக்கு கிழக்கில் புலிகளையும் ஒழித்துக் கட்டுவதற்கே சர்வ வல்லமை கொண்ட ஜனாதிபதி பதவி அறிமுகப்படுத்தப்பட்டது என்று கூறிய போதிலும் அதில் சர்வவல்லமை கொண்ட ஜனாதிபதி வெற்றிபெறவில்லை என்று லிபரல் கட்சித் தலைவர் திரு. சாணக்க அமரதுங்க (2-ம் பக்கம் பார்க்க)

## ★ ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமை மாநாட்டில் இலங்கை பிரச்னை பற்றி கேள்வி

(ஜெனிவா)

ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைத் தமிழரின் பிரச்சினைகள் பற்றியும் அவர்கள் ஒடுக்கப்படுவது பற்றியும் பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐ. நா. மனித உரிமைக் கமிஷனின் 50-வது மாநாடு (4ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல்; ஐ. தே. க. வேட்பாளர் வீடுகளும் சோதனை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ளூராட்சி தேர்தலை கொண்டு வரும் படையினர் இத்தேர்தலில் போட்டியிடும் ஐ. தே. க. வேட்பாளர்களது வீடுகளை தீவிர சோதனைக்கு நேற் (4-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்திற்கு மட்டுநகரில் எதிர்ப்பு

(மட்டுநகர்)

இலங்கையின் சுதந்திர தினத்திற்கு மட்டு. மாவட்டத்தில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. 46-வது சுதந்திர தினத்தை மட்டு. மாவட்டத்தில் நேற்று முன்தினம் கொண்டாடுவதற்கு அரசு தனது படைகள் மூலம் நடவடிக்கை எடுத்தது.

இதனை முறியடிக்கும் விதத்தில் மட்டு. மாவட்ட மாணவர்களும் பொதுமக்களும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வர்த்தக நிலை (4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கில் குறுகிய காலத்தினுள் பயங்கரவாதம் ஒழிக்கப்படும்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கிலிருந்து குறுகிய காலத்தினுள் பயங்கரவாதம் ஒழிக்கப்படுமென ஜனாதிபதி விஜயதுங்க மீண்டும் உறுதியளித்துள்ளார். நேற்றுக்காலை உடுநுவர கோவிலகந்த எனுமிடத்தில் சனசமூக அபிவிருத்தித் திட்டமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தபோது (4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் எழுதிய "மரணத்தின் பின்னே மானிடம் அர்த்தங்கேற்ற மாண்புறு கதைகள்" பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.
சி-754

16, கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் 3½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: பரணி மருந்தகசாலை, 456, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (எ-3798)

### மீண்டும் ஆரம்பம்

"ரூ போகெட்டோ ரெக்னிக்" மீண்டும் திருத்த வேலைகளை ஆரம்பித்துள்ளது கமெரா, பிளாஷ்கண், பைனகுலரிஸ், வீடியோ கமரா போன்றவை சிறந்த முறையில் வழமைபோல் திருத்திக் கொடுக்கப்படும். N S நாராயணசாமி 301 கஸ்தூரியார் வீதி கேமடி கன்னாதிட்டி சந்திக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் (சி-751)

### வைத்தியம்

செங்கண்மாரி, (Hepatitis) குட்டம், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சுற்றல், சரும நோய்கள், மாதவிடாய்க் கோளாறு, இரத்தப் போக்கு, வெள்ளைப்படுதல், கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி. இராசரத்தினம் 181, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித் தெரு, யாழ்ப்பாணம். (சி-771)

# காமினி - ஜே. ஆர். சந்தித்து பேச்சு

(கொழும்பு)

ஐ. தே. கட்சி மீண்டும் திரு. காமினி திஸாநாயக்கா இணைந்தவுடன் முன்னாள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்து பல மணி நேரம் உரையாடியுள்ளாராம். திரு. ஜெயவர்த்தனாவை திரு. காமினி "குரு" வாக மதிப்பவராம்.

காமினியை மீண்டும் கட்சிக்குள் சேர்க்குமாறு திரு ஜெயவர்த்தனா ஜனாதிபதி விஜயதுங்கவுக்கு ஆலோசனை வழங்கி வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை திரு. காமினி திஸாநாயக்கா அடுத்த வாரம் வெளிநாடு செல்லவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

யாழ். ஆஸ்பத்திரி

# சிற்றூழியர்களின் ஒய்வுதினம் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நாளை 7-ம் திகதி திங்கள் முதல் பகிஷ்கரிப்பு நெறி ஆரம்பமாகவுள்ளதால் வைத்தியசாலையில் ஏற்படப்போகும் சிற்றூழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக சகல சிற்றூழியர்களின் ஓய்வுதினம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஒய்வு தினத்தில் கடமைக்கு வேலைக்கு மேலதிக சம்பளம் வழங்கப்படும் எனவும் முன் அனுமதியின்றி லீவு எடுப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நிர்வாக உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

பேச்சு நடத்துவது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மைப்படுத்தி ஆணை செய்வது இப்போது புலிகளைச் சார்ந்தது என சபாநாயகர் எம். எச். முஹம்மது நேற்றுமுன் [illegible] நாடாளுமன்றில் நடந்த தேசிய தினவிழா நிகழ்ச்சியில் பேசும்போது குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்: ஒரு பேச்சுவார்த்தையின்போது எப்பகுதியினருக்கும் எவ்வித கட்டுப்பாடும் கிடையாது. இவற்றைச் சாதிப்பதற்கு நல்லெண்ணமும், புரிந்துணர்வும் வேண்டும்.

நாமெல்லாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்களே. என்னையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளனர். எல்லா ஒழுங்குகளும் பூர்த்தியான பின்னர் நான் அவர்களை சென்று சந்திப்பேன். எனது விஜயம் முற்றிலும் தாய்நாட்டின் நலன் கருதியதே என்றார். —சி

தஞ்சம் நிராகரிக்கப்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை 3 சிறிய ரப்பர் படகுகளில் வந்து பனிக்குளிர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 36 தமிழர்களை டென்மார்க்கையும் சுவீடனையும் பிரிக்கும் குறுகிய 'ஒரேசுண்ட்' ஜல சந்தியில் வைத்து டென்மார்க் கடல் மீட்பு சேவையினர் மீட்டுள்ளனர். இவர்கள் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டு அவற்றிலிருந்து சிறிய ரப்பர் படகுகள் மூலம் கடலுக்குள் இறக்கிவிடப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறதாம்.

மூன்று படகுகளில் முதலாவது படகு 'கொலேஜ்' கடற்கரையில் தரை தட்டியது. மற்றைய இரண்டும் கடலில் கண்டுபிடிக்கப்பட்டு அதிலிருந்தவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். சிறிய படகுகளில் ஏற்றி இவர்களை கடலில் இறக்கிவிட்ட கப்பலை தேடும் முயற்சியில் இவர்கள் விசாரிக்கப்படவுள்ளதாக பொலிசாரும் கரை பேரா பாதுகாப்பு அதிகாரிகளும் கூறுவுள்ளனர். —சி

ஐடக்கு கிழக்கில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

சிறுபான்மையினரை ஒதுக்கி நாடாளுமன்றம் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் முறையை கழுவபடுத்

## கண்டெடுக்கப்பட்ட பொருள்

சட்டநாதர் கோவில் வீதி அருகாமையில் வீட்டுத்திறப்பு ஒன்று சந்திரகாந்தா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

சர்வோதய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ஆரியரத்ன விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை சந்தித்து பேசுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது:

-சி

திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார். ஆனால் பொலிஸ்காரர் ஒருவர் தனது சக பொலிசாரையே விடுதலைப் புலிகள் எனத் தவறாகப் பார்த்து சுட்டபோது ஒரு பொலிஸ் கொல்லப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

-ம-சி

திலும் அது சாத்தியமாக அமையாது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 'ராவய' ஆசிரியர் விக்டர் ஐவன் குறிப்பிடுகையில்: சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை ஒழிப்பதற்கே ஜனாதிபதி புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றார் என்றார். —ம-சி

# ஆறும் ஆண்டு நினைவலைகள்



## பாலகிருஸ்ணன் ஜெசிந்தா

| மலர்வு: | திதி: | உதிர்வு: |
|---|---|---|
| 14-05-82 | 06-02-94 | 29-01-88 |

பூவென்றும் பொன்னென்றும் நிலவென்று முன்னை
பாசமுடன் அழைத்தது ஆரம்மா ?
பாலிரைசப் பரிதவிக்கும் பித்தர்களே எமையன்றி
பாருலகில் வேறு ஆரம்மா ?
ஆவியைத் துடிக்க வைத்து அமரருடன் நீ கலந்து
இன்றோடு ஆண்டு ஆறம்மா !
தேவி பார்வதி தீசன் பதம் தேவதைகள் நீ கலந்து
தெய்வீகமாய் இளைப்பு ஆறம்மா !

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
அக்கா, அண்ணன்மார்,
உற்றார், உறவினர்.

வி. பாலகிருஸ்ணன்.
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(சி-755

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## மார்க்கண்டு தம்பிராசா

(இளைப்பாறிய பொலிஸ் உயர் அதிகாரி)

(வட்டு-வடக்கு, சித்தன்கேணி)

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 02-06-1933 | 07-01-1994 |

07-01-1994 ல் இறைவனடி சேர்ந்த எமது தந்தையின் ஆத்ம சாந்திக் கிரியைகள், இன்று (06-01-1994) ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நிகழும். அதைத் தொடர்ந்து இடம்பெறும் மகேஸ்வர பூசையிலும் கலந்துகொள்ளுமாறு அன்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

★ தந்தையின் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் கலந்து ஆறுதல் கூறியும், அனுதாபம் தெரிவித்தும், பல்வேறு வகையில் உதவிகள் புரிந்த பொது நிறுவனங்களுக்கும் எமது நன்றிகள்.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வட்டு-வடக்கு, சித்தன்கேணி. (சி-778)

# கிழக்கில் தேர்தலுக்கு முன் தமிழ்க்குழுக்கள் மோதும் நிலை

(மட்டக்களப்பு)

கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற முன் அங்கு தமிழ் குழுக்களிடையே கடும் மோதல் ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாம்.

நேரடியாக தேர்தலில் போட்டியிடாத தமிழ் குழுக்கள் பல சுயேச்சை குழுக்களாக தேர்தலில் குதித்துள்ளன. இதில் புளொட்டில் இருந்து பிரிந்த குழுவொன்றும் ஈரோஸ் குழுவும் அரசு ஆதரவுடன் போட்டியிடுகின்றன. இதற்கு இராணுவமும் முழு ஆதரவு வழங்கி வருகின்றது.

இந்நிலையில் ஒவ்வொரு தமிழ் குழுக்களும் இராணுவத்தைவிட மோசமாக தமிழ் மக்களை நெருக்கடிக்குள்ளாக்கி வருகின்றனவாம். இவ்வாறான செயற்பாடுகளின் போது பல இடங்களில் மோதல் வரையிலான சம்பவங்களும் ஏற்பட்டுள்ளன. தற்போது இக்குழுக்களிடையே பெரும் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளதாம்.

சகல அமைப்புகளினதும் அடாவடித்தனத்தால் தமிழ்மக்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டு வருகிறார்களாம். —சி

# புலிகளை கொன்றொழிப்பதே பிரச்னைக்கு தீர்வாகுமாம்

(கொழும்பு)

சமஷ்டி முறை அல்லது சுயாட்சி வழங்கினால் கூட புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டார்கள். அதனால் நாட்டின் பிரச்னையைத் தீர்க்க உள்ள ஒரே வழி புலிகளை முழுமையாகப் படுகொலை செய்வதாகும்.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. ஜனக எஸ். எம். குணசேகரா தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்: பிரதான அரசியல் கட்சிகள் புலிகளை அழிக்க விரும்பவில்லை. அதனால் இன்று நாடு பெரும் பாதாளத்தில் விழுந்துள்ளது. இப்போது செல்லும் அரசியல் வழியில் மேலும் சென்றால் நாம் நரகத்திற்கே செல்லவேண்டி வரும் என்றார்.

இதேவேளை, இனப்பிரச்னை எனும் வேஷத்தைப் போட்டுக்கொண்டு பயங்கரவாத நடவடிக்கைகளில் புலிகள் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. நேர்மையாக முன்வந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட புலிகள் இணங்குவதற்குச் சந்தர்ப்பம் உள்ளது. தொடர்ந்தும் வன்முறை நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டால் அதற்கும் பதிலளிக்க வேண்டிய நிலை படையினருக்கு ஏற்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். -சி

# மேலும் 2000 அகதிகள் இலங்கை திரும்புகின்றனர்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து இம்மாதம் 17ம் திகதிக்கு முன்பு 2 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப இருப்பதாக புனர்வாழ்வு அமைச்சு நேற்று அறிவித்தது.

மேற்படி அகதிகள் நான்கு கட்டமாக கப்பல் மூலம் திருகோணமலைக்கு வருவார்கள். ஒவ்வொரு கட்டத்திலும் 500 பேர் வருவார்கள். இவர்கள் அனைவரும் அனேகமாக அவர்களது சொந்த இடங்களிலேயே குடியமர்த்தப்படுவார்கள்.

கடந்த இரண்டு வருடங்களில் இதுவரை 36 ஆயிரம் இலங்கை அகதிகள் நாடு திரும்பியுள்ளார்கள். வி-சி

# 10,000 ஊழியர்களின் ஈ. பி. எவ். கட்டப்படவில்லை

(கொழும்பு)

பல கூட்டுத்தாபனங்கள் அரசுக்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்கள் அரச நிதி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 10,000 சமயாசமய மற்றும் நாட்சம்பள ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி அனுப்பப்படவில்லையென தொழில் திணைக்களம் கூறியுள்ளது.

இந்த ஊழியர்கள் 1978ம் ஆண்டு தொடக்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் பணியாற்றி வருகிறார்கள். தற்காலிக ஊழியர்கள் செய்த முறைப்பாடுகளையடுத்து தற்போது விசாரணை நடைபெற்று வருகிறது.

இத்தகைய வேலை கொள்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அவர்கள் மொத்த தண்டப்பணத்துடன் 50 சதவீத அபராதக் கட்டணத்தையும் செலுத்த வேண்டும் எனவும் தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. -வி

## மரண அறிவித்தல்

### சின்னப்பு நல்லதம்பி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை வடக்கைச் சேர்ந்த சின்னப்பு நல்லதம்பி அவர்கள் 5-2-94ல் சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற திருமதி செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், திருவாளர்கள் சிவரத்தினம், யோகநாதன், திருமதி மீனாம்பிகைமா, திருவாளர்கள் நடராசா, அச்சுதானந்தன் ஆகியோரின் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12-00 மணிக்கு வட்டுக்கோட்டை வழுக்கையாற்று மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ந. சிவரத்தினம்.
(மகன்)

(இ-779)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/B

**மெதடிஸ்த**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி ஜோசப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், தமிழீழ கல்விக் கழகம் பொறுப்பாளர் திரு. இளங்குமரன், கல்விக் கழகத்தைச் சேர்ந்த திரு பாலகுமாரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்றைய அரசியல் நிலைமை குறித்தும், மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் இப்பேச்சுக்களில் ஆராயப்பட்டன. -கி-

**ஜெனிவாவில்**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 31ம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகியது. இதில் உலகின் சகல நாடுகளின் பிரதிநிதிகளும் பங்கு பற்றியுள்ளனர்.

இம் மாநாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் தொடர்ந்தும் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு இராணுவ அட்டூழியங்களுக்குட்படுவது குறித்து குரல் எழுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் குறித்து குரல் எழுப்பிவரும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் சர்வதேச அமைப்புகளே இம் மாநாட்டிலும் குரல் எழுப்பவிருப்பதாகவும் இதனால் இலங்கை பெரும் நெருக்கடியை எதிர்நோக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

**பேச்சுக்கான**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ணத்தில் தங்கிநிற்கும் காலத்தில் நல்லெண்ண சூழலை ஏற்படுத்த முயற்சிப்பதுடன் மத பணிகளிலும் ஈடுபடுவேன் எனவும் அவர் தெரிவித்தார்.

விமானம் மூலம் பலாலிக்கு வந்த இவர்கள் அங்கிருந்து வாகனத் தொடர் மூலம் நேற்று மாலை பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

இக்குழுவில் ஆயர் இல்லச் செயலாளர் சித்திரா பெர்னாண்டோ, கிழக்காசிய தேசிய கிறிஸ்தவ மன்றச் செயலாளர் அருட் கலாநிதி றியன்சி பெரேரா, யாழ்ப்பாணப் பகுதிக்கான திருச்சபை நிர்வாகி [illegible] ஜெயரத்தினம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

நேற்றுமாலை ஆயர் லெஸ்லி பெர்னாண்டோ யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி ஒன்றையும் சுமார் அரைமணி நேரம் பார்வையிட்டார். ரி-கி

# கடலில் மிதந்து வரும் மர்ம வெடிபொருட்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக மர்ம வெடிபொருட்கள் மிதந்து வருகின்றன.

நேற்றுமுன்தினமும் இவ்வாறு மிதந்துவந்த வெடிபொருள் ஒன்று மணலாறு அளம்பில் கடற்கரையில் மீனவர் ஒருவரால் மீட்கப்பட்டு புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வெடிபொருட்களை படையினரே கடலில் மிதக்க விடுவதாகவும் இவை குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் புலிகள் அப்பகுதி மக்களை கேட்டுள்ளனர். -சி

# யாழ். மாணவரின் க. பொ. த. (சா/த) பரீட்சை விடைத்தாள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் நடைபெற்ற க. பொ. த (சா/த) பரீட்சையின் யாழ்ப்பாண மாவட்ட விடைத்தாள்களைத் திருத்தும் வேலைகள் நேற்று 5ம் திகதி ஆரம்பமாகியுள்ளதாக தெரியவருகிறது.

ஏழு நிலையங்களில் மேற்படி விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் நடைபெறுகின்றன. எதிர்வரும் 13ம் திகதி திருத்த வேலைகள் பூர்த்தியடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை தவிர ஏனைய மாவட்ட விடைத்தாள்கள் கடந்த டிசம்பர் மாதமே திருத்தப்பட்டு விட்டது குறிப்பிடத்தக்கது.

# பத்து பொலிஸார் இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

கல்லடி, மஞ்சந்தொடுவாய் வாழைச்சேனை போன்ற பகுதிகளில் கடமையாற்றிய பத்து பொலிஸார் லஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

மரம் சீமெந்து போன்ற பொருட்களை கடத்துவதற்கு லஞ்சம்பெற்று ஒத்துழைத்ததாக இவர்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (சி)

**கிழக்கில் தேர்தல்**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளையும் சோதனையிட்டு வருகிறார்களாம்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 வயதிற்கும் மேற்பட்ட தேசிய அடையாள அட்டை இல்லாத அனைவருக்கும் இராணுவத்தினர் விசேட அடையாள அட்டைகளை வழங்கவுள்ளனர்.

தற்போது மட்டு மாவட்டத்தில் ஒவ்வொரு வீடுகளிலும் உள்ளோரது பூரண விபரங்கள் அடுத்த சில தினங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு படை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். (சி)

**வடக்கு கிழக்கில் குறுகிய**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்: நாட்டின் இறைமை, ஒற்றையாட்சி, பிரதேச கௌரவம் ஆகியவற்றைப் பாதுகாக்க அனைவரும் ஒரு குடும்பத்து மக்கள் போல் ஐக்கியப்படவேண்டும் என்றார்.

நேற்றுமுன்தினம் நடந்த சுதந்திர தின வைபவத்திலும் இதே போன்று உரையாற்றி இனப்பிரச்னைக்கு தற்போதைக்கு தீர்வு ஏதும் இல்லை என்பதை காட்டியுள்ளார் எனவும் அவதானிகள் கூறியுள்ளனர். -சி

**சுதந்திர**

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் யாவும் மூடப்பட்டிருந்ததுடன் சுதந்திர தினத்திற்கு முதல் நாளிலிருந்தே மாணவர்கள் பாடசாலைகளை பகிஷ்கரித்தனர்.

இராணுவத்தினர் ஒலிபெருக்கி மூலம் பாடசாலைகளுக்கு செல்லுமாறு மாணவர்களுக்கு உத்தரவிட்டும் அவர்கள் செல்லவில்லை. இதனையடுத்து பல கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு மாணவர்களை பலவந்தமாக அழைத்துச் சென்றனர். கடைகள் மூடப்பட்டிருந்ததுடன் பல இடங்களில் கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

பெப்ரவரி 4ம் திகதி தமிழர்களுக்கு கரிநாள் எனக் குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. ம-சி

**வடபகுதி**

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றைய பிரச்னையாகும்.

இவ்வாறு கொழும்பிலிருந்து நல்லெண்ண விஜயமொன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருக்கும் மெதடிஸ்த திருச்சபை குழுவைச் சேர்ந்த அருட்திரு எபநேசர் யோசப் தெரிவித்தார்.

நேற்றும் பிற்பகல் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசுகையில்;—

நல்லெண்ணக்குழு கடந்த ஆறு மாதகாலமாக வடபகுதிக்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோதிலும் எமது முயற்சி இப்பொழுதுதான் கைகூடியிருக்கிறது.

கடந்தகால வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது பல முறைகளில் பல வழிகளில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். இந்த நிலை தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது. தமிழ் மக்களை மட்டுமன்றி ஒன்றுமறியாத அப்பாவிச் சிங்கள மக்களையும் அரசியல்வாதிகள் தமது சுயபோக வாழ்வுக்காக ஏமாற்றி வருகிறார்கள்.

சாதாரண சிங்கள விவசாயிகளோ, அல்லது தொழிலாளிகளோ தமிழ் மக்களை ஏமாற்றவில்லை. இந்தநாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டியவர்கள் இவர்களை வழிநடத்தவேண்டிய அரசியல்வாதிகளே இவர்களின் சுதந்திரத்திற்கு இடையூறாக உள்ளனர்.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் இருக்கும் சந்தேகம், பயம் மாறவேண்டும். வடக்கிலிருந்து புலிகள் எப்போது பாயும் என்று தெற்கிலுள்ளவர்களுக்கு ஒருவித பயம், எப்பொழுது பொம்மர் குண்டு வீசுமோ என்ற பயம் வடபகுதி மக்களுக்கு. இந்த நிலை முற்றிலும் மாறவேண்டும் என்றும் அவர் உரையில் தெரிவித்தார். -162-இ